## எம்.கே மூவ் செயல்பாட்டுக்கு வருகிறது

மில்டன் கீன்ஸ் ‘மூவ்’ மல்டி ஆபெரேட்டர் பேருந்து பயணச்சீட்டு லண்டன் ஆய்ஸ்டர்ஸுக்கு ஒத்த திறன் அட்டை (ஸ்மார்ட் கார்டு)க்கு மாற்றப்பட்டுள்ளது.

'எம்.கே. மூவ் ' என்று அழைக்கப்படும் அட்டைகள் 1 நாள், 7 நாள் மற்றும் 28 நாள் நுழைவுச்சீட்டுகளை வழங்குகின்றன, மேலும் அதற்கு சேவைக்கு பணம் கொடுக்கும் பணப்பையும் உண்டு, எனவே நீங்கள் பயணம் செய்யும்முன் அட்டையில் பணத்தை ஏற்றி, நீங்கள் விரும்பும் பயணத்தை ஓட்டுனரிடம் கூறுங்கள், சில்லறைக்கு குழப்பம் இல்லை!

**காகித அடிப்படையிலான எம்.கே. மூவ் நவம்பர் 7 ஆம் தேதி நிறுத்தப்பட்டது, மேலும் பேருந்துகளில் விற்கவோ ஏற்றுக்கொள்ளவோ மாட்டாது.**

ஏதேனும் விமர்சனம் அல்லது அறிக்கைகள் இருப்பின், வாடிக்கையாளர் சேவைகளுக்கு அனுப்பவும் : **mkmove@milton-keynes.gov.uk.**

பேருந்து அல்லது ஓட்டுநரிடம் ஏற்படும் சிக்கல்களைப் புகாரளிக்க விரும்பினால், இயக்குபவரை நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

அக்டோபர் 30 முதல் பின்வரும் இயக்குபவர்கள், அரிவா, ரெட்லைன், யூனோ, ரெட் ரோஸ், வேல், இசட் & எஸ் (Z&S ) மற்றும் ஸ்டேஜ்கோச் ஆகியவற்றின் பேருந்துகளில் அட்டைகளைப் பயன்படுத்தலாம்.

கோவிட் 19 காரணமாக இயக்குபவர்கள் காகித பணத்தை ஏற்கவில்லை என்பதால், உங்களிடம் தொடர்பற்ற வங்கி அட்டை இல்லையென்றால் இது ஒரு சிறந்த மாற்றாகும்.

இணையதளத்தில் நீங்கள் பதிவு செய்து, அட்டையை வாங்கி மற்றும் பணமதிப்பு கூட்டலாம்.

உங்கள் அட்டையை வாங்கியவுடன், உங்கள் கணக்கின் மூலம் இணையதளத்தினூடாக கூடுதல் பணமதிப்பு ஏற்ற முடியும், தெருவில் உள்ள எந்தவொரு சாதனத்திலும் அதை பெற்றுக்கொள்ளலாம், அல்லது பெரிய நுழைவுச்சீட்டு விற்கும் இயந்திரங்களில் ஒன்றைப் பயன்படுத்தி நீங்கள் கூடுதல் பணமதிப்பு ஏற்ற முடியும் . உங்கள் அட்டையை பெரிய இயந்திரங்களில் ஒன்றிலும் வாங்கலாம், ஆனால் தயவுசெய்து அதை உடனடியாக பதிவு செய்யுங்கள், இல்லையென்றால் எந்தவொரு விசாரணையிலும் எங்களால் உதவ முடியாது.

மேலும் தகவலுக்கு, இணையதளத்தில் வழங்கப்பட்ட எங்கள் கேள்விகள் (FAQs) மற்றும் விதிமுறைகளை படிக்கவும்.

**https://www.getsmartertravelmk.org/on-board/smart-ticketing**